செ.வெ.எண்: 42 நாள்: 19.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான பணிகளை அலுவலர்கள் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016ஐ முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19-9-2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சார்பில் தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016 விரைவில் நடைபெறவுள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு தேர்தல் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறைகளை சேர்ந்த அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இன்று (19-9-2016) வெளியிடப்பட்ட உள்ளாட்சி வாக்காளர் பட்டியல் குறித்த விபரம், தேர்தல் தொடர்பான பணிகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு தடுப்பு வேலிகள் அமைத்திட உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்யவும் மற்றும் இம்மையங்களுக்கு சம்மந்தப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்களிடம் தடையின்மை சான்று பெறவும், வாக்குப்பதிவு அலுவலர்கள் விபரம் சேகரிக்கவும் மற்றும் தகவல் கோப்பு படிவம் தயார் செய்யவும், மேலும் இதன் மூலம் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான பணிகளை சிறப்பாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**